# *பாராளுமன்ற அரசாங்கக் கட்சி முதற்கோலாசானின் அலுவலகம்*

## *பாராளுமன்றம்- ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே*

***நோக்கு :***

சனநாயகத்தின் சிறந்த பெறுபேறுகளை மக்களுக்கு வழங்கும் பொருட்டு சட்டவாக்குநரின் பணிகளை மிகத் திறம்பட நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் முன்னணி நிறுவனமாக செயற்படல்.

***செயற்பணி :***

சிறந்த அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட அலுவலகச் சூழலில் வினைத்திறன் மிக்கதும் தேர்ச்சியுள்ளதும், திருப்திகரமானதும் சிறந்த தொடர்பாடலைக் கொண்டதும், ஆக்கத்திறன் வாய்ந்ததுமான பதவியணியினால் பாராளுமன்றத்தின் அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசானுக்குரிய அனைத்து உத்தியோகபூர்வ பணிகளையும் ஆட்சியில் உள்ள அரசாங்கத்தின் பலத்தையும் சிறப்பையும் பாதுகாத்துக் கொள்ளுவதற்கும் இதனை மேம்படுத்துவதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்படல்.

**பணிகள் :**

இந்த அலுவலகத்தின் பணிகள் பாராளுமன்றத்தின் அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசானின் அறிவுறுத்தல்கள் மற்றும் ஏற்பாடுகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும். அரசாங்கக்தின் அனைத்து பாராளுமன்றப் பணிகளையும் மிகச் சிறந்தவிதத்தில் ஆக்கத்திறன் வாய்ந்தவாறு நிறைவேற்றிக் கொள்ளுவதற்கு இந்த அலுவலகம் ஒத்துழைப்பு வழங்குகின்றது. அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கின்ற சட்டமூலங்கள், கட்டளைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் ஏனைய பிரேரணைகளை நிறைவேற்றிக் கொள்ளுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல் மற்றும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்காக பாராளுமன்றத்தினுள்ளும் அதற்கு வெளியேயும் அரசாங்கக் கட்சி உறுப்பினர்களின் பங்களிப்பை ஒருங்கிணைப்புச் செய்தல் அத்துடன் ஏற்பாடுகளைச் செய்தல்.

**நிருவாகக் கட்டமைப்பு :**

பாராளுமன்றத்தின் அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசானின் அறிவுறுத்தல்களையும் பணிப்புகளையும் நடைமுறைப்படுத்தல்பாராளுமன்றத்தின் அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசானின் செயலாளரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்காக இரண்டு சிரேஷ்ட உதவிச் செயலாளர்கள், உதவிச் செயலாளர் ஒருவர், நிருவாக உத்தியோகத்தர் ஒருவர் உட்பட பதவியணியைச் சேர்ந்த 39 பேர் உள்ளனர். இரண்டு அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்களுக்கான வெற்றிடங்களும் ஒரு அலுவலக உதவியாளருக்கான வெற்றிடமும் நிலவுகின்றன.

இதற்கு மேலதிகமாக 2016 நவம்பர் 28ஆந்திகதிய அமைச்சரவைத் தீர்மானத்துக்கு அமைவாக அரசாங்கக் கட்சியின் 2 பிரதி முதற்கோலாசான்கள் பதவிகள் அத்துடன் 3 உதவி முதற்கோலாசான்கள் பதவிகள் உருவாக்குவதற்கு அங்கீகாரம் கிடைக்கப் பெற்றது. 2 பிரதி முதற்கோலாசான் பதவிக்காக கௌரவ பிரதி அமைச்சர் ஒருவரும் கௌரவ இராஜாங்க அமைச்சர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளதுடன் 2 உதவி முதற்கோலாசான்கள் பதவிகளுக்காக இரண்டு கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த உதவி முதற்கோலாசானின் பிரத்தியேக பதவியணிக்காக 1 பிரத்தியேக உதவி உத்தியோகத்தரும் 6 முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களும் 3 அலுவலகப் பணியாளர்களும் இணைக்கப்பட்டுள்ளனர் இதற்கமைவாக மொத்த உத்தியோகத்தர்களின்ன எண்ணிக்கை 61 ஆகும்.

## பாராளுமன்ற அரசாங்கக் கட்சி முதற்கோலாசான் அலுவலகத்தின் பிரதான பணிகள் :

I. பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுகின்ற அரசாங்கப் பணிகளுக்கு முன்னுரிமை வழங்கி அரசாங்கக் கட்சியின் சகல நடவடிக்கைகளையும் திட்டமிடும் போது ஒத்துழைப்பை வழங்குதல், ஒழுங்கு செய்தல் மற்றும் இந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்கான ஒருங்கிணைப்பு வேலைகளை நெறிப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

II. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற சட்டமூலங்கள், கட்டளைகள், ஒழுங்கு விதிகள் மற்றும் ஏனைய பிரேரிப்புகள் போன்றவற்றின் சட்டரீதியான நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தல்.

III. அரசாங்கக் கொள்கைகள் தொடர்பில் அரசாங்கக் கட்சியின் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களை அறிவுறுத்தல் இந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்.

IV. பாராளுமன்றத்தின் அரசாங்கக் கட்சிக் குழுக் கூட்டங்களைக் கூட்டுதல், எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல் அத்துடன் குறித்த கூட்டங்களின் சகல அறிக்கைகளையும் பேணுதல். அவற்றை கௌரவ அமைச்சர்களுக்கு விநியோகித்தல். எடுக்கப்படுகின்ற தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் மீளாய்வுப் பணிகளை மேற்கொள்ளல்.

V. பாராளுமன்ற அமர்வுகள் நடைபெறும் தினங்களில் பாராளுமன்றத்தின் கோரத்தைப் பேணுவதற்காக கௌரவ உறுப்பினர்களை அழைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் தொடர்ச்சியாக கௌரவ உறுப்பினர்களின் வருகை அத்துடன் வெளியே செல்லல் தொடர்பில் கண்காணித்தல்.

VI. பத்திரிகை கலந்துரையாடல்களுக்கு அழைப்பு விடுத்தல் மற்றும் அறிக்கைகளை விடுத்தல்.

VII. பாராளுமன்ற உறுப்பினர்களின் வாய்மூல வினாக்கள் சமர்ப்பிக்குமிடத்து விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சுக்களுடன் தொடர்புகளை மேற்கொண்டு பெறப்படுகின்ற விடைகளை கௌரவ முதற்கோலாசானுக்கு சமர்ப்பித்து உரிய அமைச்சர் அல்லது இராஜாங்க அமைச்சர், பிரதி அமைச்சர் பாராளுமன்ற சபைக்குள் பிரசன்னமாகி இருக்காதவிடத்து குறித்த அமைச்சருக்காக கௌரவ முதற்கோலாசான் விடைகளை அளிப்பதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் ஒழுங்கு செய்தல்.

VIII. பாராளுமன்ற விவாதங்களின் போது அரசாங்கக் கட்சிக்காக கலந்து கொள்ளுகின்ற கௌரவ அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியலைத் தயாரித்தல் அத்துடன் உரையாற்றுவதற்கான நேரத்தினை ஒதுக்குதல்.

IX. பாராளுமன்ற விவாதங்களில் கலந்து கொள்ளுகின்ற அரசாங்கக் கட்சியின் அமைச்சர்கள் உறுப்பினர்களுக்குத் தேவையான பின்னணி அறிக்கைகள், துணைச் சட்டங்கள், ஒழுங்கு விதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் போன்ற தகவல்களை வழங்குதல்.

X. பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழுக் கூட்டங்கள் மற்றும் கட்சித் தலைவர்களின் கூட்டங்களில் கலந்து கொள்ளல் இந்தக் கூட்டங்களில் எடுக்கப்படுகின்ற தீர்மானத்திற்கு அமைவாக அரசாங்கக் கட்சியின் அனைத்து நடவடிக்கைகளையும் ஒழுங்கு செய்தல்.

XI. பாராளுமன்றத்தின் கௌரவ சபைமுதல்வர் மற்றும் சபை முதல்வர் அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து அரசாங்கக் கட்சி நடவடிக்கைகளை சிறந்த விதத்தில் ஒழுங்குபடுத்துதல், மேற்பார்வை செய்தல்.


XII. பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் அலுவலகம், மற்றும் பாராளுமன்றத்தின் ஏனைய திணைக்களங்களுடன் புரிந்துணர்வுடன் உள்ளக செயற்பாடுகளுக்கான ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளல்.பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பின் போது அதற்காக அரசாங்கக் கட்சி உறுப்பினர்களை அழைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

XIII. பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பின் போது அதற்காக அரசாங்கக் கட்சி உறுப்பினர்களை அழைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

XIV. வருடாந்த வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும் போது எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து பாராளுமன்றத்தில் இதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல்.

XV. கௌரவ உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்கு பயணங்களை மேற்கொள்ளும் போது விடுமுறைக்கான விண்ணப்பங்கள் உரிய அனுமதிக்காக சிபாரிசு செய்து சமர்ப்பித்தல்.

## பாராளுமன்ற அரசாங்கக் கட்சி முதற்கோலாசான் அலுவலகத்தின் கட்டமைப்பு



# <u>பதவியணித் தகவல்கள்</u>

## 2018/12/31திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட பதவியணி

| | பதவி | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | 2017.12.31 திகதியன்று எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | செயலாளர் | 01 | 01(பதில் கடமை) | |
| 02 | சிரேஷ்டஉதவிச்செயலாளர் | 01 | 01 | |
| 03 | உதவிச்செயலாளர் | 01 | 01 | |
| 04 | ஒருங்கிணைப்புச் செயலாளர் (தற்காலிக) | 02 | 02 | |
| 05 | நிருவாக உத்தியோகத்தர் | 01 | 01 (ஒப்பந்தம்) | |
| 06 | மொழிபெயர்ப்பாளர் | 02 | 02 | |
| 07 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 03 | 02 | 01 |
| 08 | முகாமைத்துவ உதவியாளர் | 12 | 09 ஒப்பந்தம் 01 | 02 |
| 09 | சாரதி | 08 அமய 01 | 08 அமய 01 | |
| 10 | அலுவலக உதவியாளர் | 09 | 08 | 01 |
| | மொத்தம் | 41 | 37 | 04 |

இரண்டு உதவி முதற்கோலாசான்களின் பிரத்தியேகப் பதவியணி

| | பதவி | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | 2017.12.31 உள்ள எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 08 | பிரத்தியேக உதவியாளர் | 02 | 02 | |
| 09 | முகாமைத்துவ உதவியாளர் | 12 | 11 | 01 |
| 10 | அலுவலக உதவியாளர் | 06 | 06 | |

# மனித வள முகாமைத்துவம்

*2018 ஆம் ஆண்டின் பதவியணி நியமனங்கள் :*

| தொடரிலக்கம் | உத்தியோகத்தர் பெயர் | பதவி | நியமனத் திகதி |
|---|---|---|---|
| 01 | திரு. டீ.ஆர் த சொய்சா | நிருவாக உத்தியோகத்தர் (ஒப்பந்தம்) | 2018.11.25 |
| 02 | திரு. எச்.ஏ குணரத்ன | அ.மு.உ (ஒப்பந்தம்) | 2018.08.13 |
| 03 | திரு. இரேஷ் திலுக | அ.உ. III | 2018.08.08 |
| 04 | திரு. சமல் ஜீவந்த | அ.உ. III | 2018.08.08 |

*2018ஆண்டின் பணியாட் தொகுதி இடமாற்றங்கள் (அலுவலகத்துக்கு வெளியே):*

| தொடரிலக்கம் | உத்தியோகத்தர் பெயர் | பதவி | இடமாற்றம் பெற்ற திகதி |
|---|---|---|---|
| 01 | திரு. சுனில் கலகம | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | 2018.08.20 |
| 02 | திரு. டீ.டீ.எச். மெண்டிஸ் | அபிவிருத்தி உத்தியோகத்தர். | 2018.03.19 |
| 03 | திரு. குமார ரத்நாயக்க | அ.உ. II | 2018.05.15 |
| 04 | திரு. ஜீ.சி.பேருசிங்க | அ.உ. III | 2018.03.21 |
| 05 | திரு.டீ.எம்.டீ.சிரிமான்ன | அ.உ III | 2018.08.01 |

*2018 ஆண்டின் பணியாட் தொகுதி ஒப்பந்த அடிப்படையில் சேவை முடிவுறுத்தல்:*

| தொடரிலக்கம் | உத்தியோகத்தர் பெயர் | பதவி | சேவை முடிவுறுத்தப்பட்ட திகதி |
|---|---|---|---|
| 01 | திரு.சீ. குறுப்பு | செயலாளர் | 2018.12.18 |
| 02 | திரு.எச்.ஏ. குணரத்ன (ஒப்பந்த அடிப்படையில் மீளச் சேவைக்கமர்த்தப்பட்டுள்ளார்) | அ.மு.உ (ஒப்பந்தம்) | 2018.08.11 |

*2018ஆண்டின் பணியாட் தொகுதியின் இளைப்பாறல்:*

| தொடரிலக்கம் | உத்தியோகத்தர் பெயர் | பதவி | இளைப்பாறிய திகதி |
|---|---|---|---|
| 01 | திரு. டீ.ஆர் த சொய்சா (ஒப்பந்த அடிப்படையில் மீளச் சேவைக்கமர்த்தப்பட்டுள்ளார்) | நிருவாக உத்தியோகத்தர் | 2018.11.25 |

# மனித வள அபிவிருத்தி

## உள்நாட்டுப் பயிற்சி

| உத்தியோகத்தரின் பெயர் | பதவி | பயிற்சி | பயிற்சி நிறுவனம் | பயிற்சிக் காலம் |
|---|---|---|---|---|
| திரு. சுனில் கலகம | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | உளவியல் ஆலோசனை டிப்ளோமா பாடநெறி | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 2018ஆண்டு பூராவும் |
| அனைத்து உத்தியோகத்தர்களும் | - | மன உழைச்சல் முகாமைத்துவம் தொடர்பான ஒரு நாள் செயலமர்வு | கனேமுல்ல வெட்வோட்டர் விடுதி | 2018.01.30 |
| அனைத்து உத்தியோகத்தர்களும் | - | பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான இரண்டுநாள் பயிற்சிச் செயலமர்வு | ரன்மிஹிதென்ன தேசிய நாடகப் பூங்கா | 2018.06.14 மற்றும் 15 |
| கனிஷ்ட உத்தியோகத்தர்கள் | சாரதிகள் மற்றும் அலுவலக உதவியாளர் கள் | தமிழ் மொழி பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | அரசகரும மொழிகள் திணைக்களம் - போதனாசிரியர் | 2018 ஜனவரி தொடக்கம் 50 மணித்தியாளங்கள் |
| திரு.தம்மிக அமரசிங்க | அ.மு.உ | புதிய சிகாஸ் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான பயிற்சி செயலமர்பு | மிலோதா நிறுவனம் | 2018.09.10 தொடக்கம் 13 வரை |
| திருமதி. நிராஷா தில்ருக்ஷி விக்ரமசிங்க | அ.மு.உ | புதிய சிகாஸ் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான பயிற்சி செயலமர்பு | மிலோதா நிறுவனம் | 2018.09.10 தொடக்கம் 13 வரை |
| திருமதி. மஞ்ஜுலா ராஜபக்ஷ | உதவிச் செயலாளர் | ஆங்கில டிப்ளோமா பாடநெறி | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | ஒரு வருட பாடநெறி |
| திரு. தம்மிக அமரசிங்க | அ.மு.உ | ஆங்கில சான்றிதழ் பாடநெறி | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | 2018ஜனவரி |

## வெளிநாட்டுப் பயிற்சி

| உத்தியோகத்தரின் பெயர் | பதவி | பயிற்சிக் காலப்பகுதி | பயிற்சி | பயிற்சிக்காக சென்ற நாடு |
|---|---|---|---|---|
| திரு. எம்.எஸ்.எம்.றியாஸ் | மொழி பெயர்ப்பாளர் | 2018 மார்ச்சு 13 தொடக்கம் 16 வரை | Study Visit to Lok Sabha – Parliament of India | இந்தியா |
| திருமதி. யமுனா ஜயலத் | அ.மு.உ | 2018 மார்ச்சு 13 தொடக்கம் 16 வரை | Study Visit to Lok Sabha – Parliament of India | இந்தியா |
| திருமதி. தர்மா மாலினி | அ.மு.உ | 2018 மார்ச்சு 13 தொடக்கம் 16 வரை | Study Visit to Lok Sabha – Parliament of India | இந்தியா |
| திருமதி.கங்கா கடுகம்பல | அ.மு.உ | 2018 மார்ச்சு 13 தொடக்கம் 16 வரை | Study Visit to Lok Sabha – Parliament of India | இந்தியா |
| திரு.சீ குறுப்பு | செயலாளர் | 2018 ஏப்ரல் 07 தொடக்கம் 18 வரை | Study visit to National Diet of Japan | ஜப்பான் |
| திரு. தேவிந்த குணசேகர | கௌரவ முதற்கோலாசானின் ஒருங்கிணைப்புச் செயலாளர் | 2018 ஏப்ரல் 07 தொடக்கம் 18 வரை | Study visit to National Diet of Japan | ஜப்பான் |
| திருமதி. தரணி குமாரதாச | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | 2018 ஆகஸ்ட் 01 தொடக்கம் செப்தெம்பர் 02 வரை | 34th Parliamentary Internship programme for foreign Parliamentary Officials | இந்தியா |
| திரு.டீ,ஆர் த சொய்சா | நிருவாக உத்தியோகத்தர் | 2018 ஒக்தோபர் 01 தொடக்கம் 05 வரை | Study Visit to Lok Sabha – Parliament of India | இந்தியா |
| திரு.ஜகத் லியனகே | கணக்கு உதவியாளர் | 2018 ஒக்தோபர் 01 தொடக்கம் 05 வரை | Study Visit to Lok Sabha – Parliament of India | இந்தியா |
| திருமதி.எனிட்டா ராஜபக்ஷ | அ.மு.உ | 2018 ஒக்தோபர் 01 தொடக்கம் 05 வரை | Study Visit to Lok Sabha – Parliament of India | இந்தியா |
| திருமதி. நிராஷா தில்ருக்ஷி | அ.மு.உ | 2018 ஒக்தோபர் 01 தொடக்கம் 05 வரை | Study Visit to Lok Sabha – Parliament of India | இந்தியா |

# 2018ஆம் ஆண்டின் செயலாற்றுகை

## 2018 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பிரதான பணிகள்.

- 2018.01.01 ஆந் திகதி தொடக்கம் 2018.12.31 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு உரியவாறு பின்வரும் சட்டமூலங்கள் மற்றும் 33 பிரேரிப்புகள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ளுவதற்காக அரசாங்கக் கட்சியின் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளித்து தேவையான ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன.

| தொடர் இலக்கம் | சட்டத்தின் பெயர் | சட்டம் அங்கீகரிக்கப்பட்ட திகதி | வர்த்தமானப் பத்திரிகையின் II பகுதியில் மேலதிகமாக பிரசுரிக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|
| 01 | 2018 ஆண்டின் 1 இலக்க கடற்றொழில் (வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டமூலம் | 2018.02.08 | 2018.02.09 |
| 02 | 2018 ஆண்டின் 4 இலக்க மதுவரி (திருத்தச்) சட்டமூலம் | 2018.03.19 | 2018.03.23 |
| 03 | 2018 ஆண்டின் 2 இலக்க மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத்தீர்வைகள் சட்டம் | 2018.03.19 | 2018.03.23 |
| 04 | 2018 ஆண்டின் 5 இலக்க வலுக்கட்டாயமாகக் காணாமற் போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேச சமவாயச் சட்டம் | 2018.03.21 | 2018.03.23 |
| 05 | 2018 ஆண்டின் 8 இலக்க தீவிரப் பொறுப்பு முகாமைச் சட்டம் | 2018.03.28 | 2018.03.29 |
| 06 | 2018 ஆண்டின் 6 இலக்க நம்பிக்கைப் பொறுப்புக்கள் (திருத்தம்) சட்டம் | 2018.03.28 | 2018.03.29 |
| 07 | 2018 ஆண்டின் 7 இலக்க புலமைச்சொத்து (திருத்தச்) சட்டமூலம் | 2018.03.28 | 2018.03.29 |
| 08 | 2018 ஆண்டின் 9 இலக்க நீதித்துறை (திருத்தச்) சட்டமூலம் | 2018.05.15 | 2018.05.18 |
| 09 | 2018 ஆண்டின் 11 இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் | 2018.05.21 | 2018.05.25 |
| 10 | 2018 ஆண்டின் 10 இலக்க தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் | 2018.05.21 | 2018.05.25 |
| 11 | 2018 ஆண்டின் 12 இலக்க குடியியல் வான்செலவு (திருத்தச்) சட்டமூலம் | 2018.05.21 | 2018.05.25 |
| 12 | 2018 ஆண்டின் 13 இலக்க இலங்கை தேயிலைச் சபை (திருத்தச்) சட்டமூலம் | 2018.06.05 | 2018.06.08 |
| 13 | 2018 ஆண்டின் 15 இலக்க மகப்பேறு நன்மைகள் செல்லல் (திருத்தச்) சட்டமூலம் | 2018.06.18 | 2018.06.22 |
| 14 | 2018 ஆண்டின் 14 இலக்க கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல் ) (திருத்தச்) சட்டமூலம் | 2018.06.18 | 2018.06.22 |
| 15 | 2018 ஆண்டின் 16 இலக்க தேசிய பாதுகாப்பு நிதியம் (திருத்தச்) சட்டமூலம் | 2018.06.22 | 2018.06.22 |

| | | | |
|---|---|---|---|
| 16 | 2018 ஆண்டின் 17 இலக்க ஜெனரால் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைகழகம் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | 2018.06.28 | 2018.06.29 |
| 17 | 2018 ஆண்டின் 18 இலக்க 1990 சுவசெரிய மன்றம் சட்டம் | 2018.07.04 | 2018.07.06 |
| 18 | 2018 ஆண்டின் 19 இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் | 2018.07.17 | 2018.07.20 |
| 19 | 2018 ஆண்டின் 20 இலக்க நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டமூலம் | 2018.07.30 | 2018.08.03 |
| 20 | 2018 ஆண்டின் 22 இலக்க இலஞ்ச (திருத்தச்) சட்டமூலம் | 2018.07.30 | 2018.08.03 |
| 21 | 2018 ஆண்டின் 21 இலக்க காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் | 2018.07.30 | 2018.08.03 |
| 22 | 2018 ஆண்டின் 23 இலக்க இருப்பிடக்கூறு சொத்தாண்மை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் | 2018.08.15 | 2018.08.17 |
| 23 | 2018 ஆண்டின் 24 இலக்க குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் (திருத்தச்) சட்டமூலம் | 2018.08.15 | 2018.08.17 |
| 24 | 2018 ஆண்டின் 25 இலக்க சேர்பெறுமதி வரி ((திருத்தச்) சட்டமூலம் | 2018.08.16 | 2018.08.17 |
| 25 | 2018 ஆண்டின் 26 இலக்க மதுவரி (திருத்தச்) சட்டமூலம் | 2018.09.03 | 2018.09.07 |
| 26 | 2018 ஆண்டின் 27 இலக்க அமரதேவ அழகியல் மற்றும் ஆராய்ச்சி நிலையம் சட்டமூலம் | 2018.09.03 | 2018.09.07 |
| 27 | 2018 ஆண்டின் 28 இலக்க மருத்துவம் (திருத்தச்) சட்டமூலம் | 2018.09.19 | 2018.09.21 |
| 28 | 2018 ஆண்டின் 29 இலக்க வானூர்தி மூலம் ஏற்றிச் செல்லல் சட்டமூலம் | 2018.09.28 | 2018.09.28 |
| 29 | 2018 ஆண்டின் 30 இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் ((திருத்தச்) சட்டமூலம் | 2018.09.28 | 2018.09.28 |
| 30 | 2018 ஆண்டின் 33 இலக்க பொருளாதார சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் | 2018.10.04 | 2018.10.05 |
| 31 | 2018 ஆண்டின் 32 இலக்க பெருந்தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை சட்டமூலம் | 2018.10.04 | 2018.10.05 |
| 32 | 2018 ஆண்டின் 34 இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலக சட்டமூலம் | 2018.10.22 | 2018.10.26 |
| 33 | 2018 ஆண்டின் 35 இலக்க நிதிச் சட்டமூலம் | 2018.11.01 | 2018.11.02 |

- 2018 ஆம் ஆண்டின் பாராளுமன்ற அரசாங்கக் கட்சியின் குழுக் கூட்டம் பின்வருமாறு 18 தடவைகள் நடாத்தப்பட்டுள்ளதுடன், இந்த கூட்டங்களின்அறிக்கைகளைதயாரித்து அதிமேதகைய சனாதிபதி, கௌரவ பிரதம அமைச்சர், கௌரவ சபை முதல்வர் உட்பட கௌரவ அமைச்சர்கள் மற்றும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

| மாதம் | திகதி | மாதம் | திகதி |
|---|---|---|---|
| சனவரி | - | யூலை | 02, 16 |
| பெப்ரவரி | - | ஆகஸ்ட் | 06, 23 |
| மார்ச் | 05, 19, 22 | செப்தெம்பர் | 03, 17 |
| ஏப்ரல் | 02 | ஒக்தோபர் | 10, 22 |
| மே | 08,21 | நவம்பர் | - |
| யூன் | 04 | திசெம்பர் | - |

- அரசாங்கக் கட்சிக் குழுக் கூட்டங்களில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற சட்டமூலங்கள் மற்றும் திருத்தங்கள் தொடர்பில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளித்து அதற்குத் தேவையான ஒத்துழைப்பு வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

- 2018 ஆம் ஆண்டின் பாராளுமன்றம் கூட்டப்பட்ட ஏனைய தினங்களிலும் நடாத்தப்பட்ட விவாதங்களின் போதும் பாராளுமன்ற ஒத்திவைப்பு வேளை விவாதங்களின் போதும் அரசாங்கக் கட்சிக்காக உரையாற்றவிருந்த கௌரவ உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல்களைத் தயாரித்தல் மற்றும் விவாதங்களுக்கான நேர ஒதுக்கீட்டு நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல் விவாதங்களுக்குத் தேவையான முக்கிய தகவல்கள் மற்றும் தரவுகள் கௌரவ உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- வரவு செலவுத் திட்ட விவாதங்கள் நடைபெறுகின்ற காலப் பகுதிக்கு மேலதிகமாக பொதுவாக எல்லா மாதங்களினதும் முதலாவது ஞாயிறுக்குப் பின்னர் வருகின்ற வாரத்தின் செவ்வாய் தொடக்கம் நான்கு நாட்கள் மற்றும் மூன்றாவது ஞாயிறுக்குப் பின்னரான வாரத்தின் செவ்வாய் தொடக்கம் நான்கு நாட்கள் என மாதமொன்றுக்கு எட்டு நாட்கள் பாராளுமன்ற கூட்டங்கள் நடைபெறும். சகல பாராளுமன்ற அமர்வு வாரம் அல்லது நாளுக்குரிய நிகழ்ச்சித் திட்டம் பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பிலான குழுவினால் தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் கௌரவ அமைச்சர்கள் உறுப்பினர்களுக்கு அறிவித்தல். வாக்களிப்புக்காகக் கலந்து கொள்ளுமாறு அறிவித்தல். இந்த அலுவலகத்திற்குக் கையளிக்கப்பட்ட பிரதான பணிகளாகும். அதற்கமைவாக கடிதங்கள் மற்றும் தொலை நகல், குறுஞ் செய்தி Viber, Whatsapp மற்றும் தொலைபேசி ஊடாக அவ்வப்போது கௌரவ அரசாங்கக் கட்சி உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டன.

- வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றும் விவாதங்களில் மற்றும் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகின்ற ஏனைய சட்டங்கள் தொடர்பிலான விவாதங்களின் போதும் தேவையான பின்னணி அறிக்கைகளை வழங்கி அரசாங்கக் கட்சியின் கௌரவ உறுப்பினர்களை அறிவுறுத்தப்பட்டன.

- சகல பாராளுமன்ற அமர்வு தினங்களில் வாய்மூல வினாக்களுக்கான விடைகளை விடயத்துக்கப் பொறுப்பான அமைச்சுக்களின் ஊடாகப் பெற்று பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்காக அந்தந்த அமைச்சுக்களுடன் தொடர்புகளை மேற்கொண்டு அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் வாய்மூல விடையை வழங்குவதற்குரிய அமைச்சுக்களின் மாண்புமிகு அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், அல்லது பிரதி அமைச்சர்கள் பாராளுமன்றத்தில் பிரசன்னமாக இல்லாத சந்தர்ப்பத்தில் இது தொடர்பில் கௌரவ முதற்கோலாசான் ஊடாக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

- பொதுவான முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பில் பாராளுமன்ற ஒத்திவைக்கு வேளை விவாதத்தக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பிரேரணைகள் தொடர்பில் மற்றும் நிலையியல் கட்டளை 27(2) இன் கீழான வினாக்கள், கௌரவ பிரதம அமைச்சரிடம் வினவப்படும் வினாக்கள், மற்றும் வாய்மூல விடைக்கான வினாக்கள் தொடர்பில் உரிய அமைச்சர் மற்றும் உரிய அமைச்சின் உத்தியோகத்தர்களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- பாராளுமன்றத்தின் அரசாங்கக் கட்சி மற்றும் எதிர்க் கட்சியின் சகல உறுப்பினர்களினதும் அமைச்சுச் செயலாளர்களினதும், அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் தனிப்பட்ட பதவியணியினரின் தொலைபேசி இலக்கங்கள், பெக்ஸ் இலக்கங்கள் மற்றும் முகவரிகள் (கொழும்பு மற்றும்

வெளி மாவட்டங்கள்) தொடர்பிலான தகவல்களைச் சேகரித்து குறித்த தகவல்கள் உள்ளடங்கிய ஆவணமொன்றை இந்த பதவியணியினால் தயாரிக்கப்பட்டு இது அவ்வப்போது இற்றைவரைப்படுத்திப் பேணப்பட்டு வருகின்றது. இந்த ஆவணத்தை அரசாங்க அச்சகத்தின் ஊடாக அச்சிட்டு சனாதிபதி செயலகம், பிரதம அமைச்சர் அலுவலகம், சகல உறுப்பினர்கள், சகல தூதரகங்கள் மற்றும் சகல அமைச்சுக்கள், மாகாண சபைகள், அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளுக்கு இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- 2019 ஆம் ஆண்டு பாராளுமன்ற அமர்வு தினங்கள் தொடர்பிலான விபரங்கள் உள்ளடக்கப்பட்ட நாட்காட்டி சகல கௌரவ உறுப்பினர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் உட்பட தேவையான அனைவருக்கும் விநியோகிக்கப்பட்டது.

- பாராளுமன்றக் கூட்டங்கள் நடாத்தப்படுகின்ற தினங்களில் அரசாங்கக் கட்சியின் மாண்புமிகு உறுப்பினர்களின் பாராளுமன்றப் பங்களிப்பை மேற்பார்வை செய்வதற்காக இந்த அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் கடமை முறைமாற்று அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் நுழைவாயில் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டதுடன் பதவிநிலை உத்தியோகத்தர்கள் உத்தியோகபூர்வ கூடத்தில் பிரசன்னமாக இருந்து மீளாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- வாக்களிப்பு நடைபெறுகின்ற சந்தர்ப்பத்தில் அரசாங்கக் கட்சியின் வாக்களிப்புத் தொடர்பில் தகவல்கள் இந்த அலுவலகத்தின் உத்தியோகத்தர்களைக் கொண்டு அறிக்கையாகப் பெற்று இந்தத் தகவல்கள் கௌரவ முதற்கோலாசானுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

- தேவையான சந்தர்ப்பங்களில் அரசாங்கக் கட்சியின் கௌரவ உறுப்பினர்களுக்கு அவசர தகவல்கள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் அவர்களுடன் தொடர்சியான ஒருங்கிணைப்புகளை மேற்கொள்ளுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன.

- அரசாங்கக் கட்சியின் கௌரவ உறுப்பினர்களின் வரவு அறிக்கையைப் பேணுதல் மற்றும் மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு தொடர்ச்சியாக பாராளுமன்ற கூட்டங்களில் கலந்து கொள்ளாது இருப்பதற்கு எதிர்பார்க்கும் உறுப்பினர்கள் தொடர்பில் விடுமுறையை வழங்கும் பிரேரணையொன்றைச் சமர்ப்பித்தல் (அரசியலமைப்பின் 66(உ) உறுப்புரை)

- அரசாங்கக் கட்சியின் கௌரவ உறுப்பினர்களின் விவாதங்கள் உள்ளடக்கப்பட்ட இறுவட்டுக்களை(CD) கௌரவ உறுப்பினர்களின் கோரிக்கையின் பேரில் வழங்குவதற்கும் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- கௌரவ உறுப்பினர்களினால் இந்த அலுவலகத்திற்கு அனுப்புகின்ற கோரிக்கைகளுக்கு உரியவாறான ஆவணப் பணிகள் மற்றும் தட்டெழுத்துப் பணிகளை மேற்கொண்டு ஒத்துழைப்புகள் வழங்கப்பட்டன.

- கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் போது இது பற்றி அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசானின் சிபாரிசுடன் அதிமேதகைய சனாதிபதிக்கும்மாண்புமிகு பிரதம அமைச்சருக்கும் சமர்ப்பிக்கப்பட்டது.

- தற்பொழுதுள்ள கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களது உறவினர்களின் மரணச் சடங்குகளிலும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் மரணச் சடங்குகளிலும் அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான் சார்பில் அனுதாபச் செய்தியைத் தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அலுவலகத்தின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக நிறுவனத்தின் பௌதிக மற்றும் மனித வளங்களை வினைத்திறனுடனும் ஆக்கத் திறன் வாய்ந்ததுமாக பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் பதவிநிலை உத்தியோகத்தர்களினால் இவைகள் மேற்பார்வை செய்யப்பட்டன.

# 2018 கணக்குகள் தொடர்பான விபரங்கள்

## *2018 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடுகளும் செலவினங்களும் :*

திணைக்களத்தின் பெயர் : பாராளுமன்ற அரசாங்கக் கட்சி முதற்கோலாசானின் அலுவலகம்
செலவுத் தலைப்பு : 018
நிகழ்ச்சித் திட்ட இலக்கமும் பெயரும் : 01 தொழிற்பாட்டு நிகழ்சித் திட்டம்
கருத்திட்ட இலக்கமும் பெயரும் : 01 பொது நிருவாகமும் தாபன சேவைகளும்

## *மூலதனச் செலவினம்:*

| செலவுத் தலைப்பு இலக்கம் | செலவு விபரம் | (1) வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ஒதுக்கீடு | (2) நி.பி.66 மற்றும் நி.பி.69 நியதிகளின் படியான மாற்றம்,குறைநிரப்பு ஒதுக்கீடு,மதிப்பீட்டு.ஒதுக்கீடு | (3) மொத்த தேறிய ஒதுக்கீடு (1+2) | (4) மொத்த செலவினம் | (5) தேறிய விளைவுச் சேமிப்புகள் (3-4) |
|---|---|---|---|---|---|---|
| | | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ |
| 2002 | இயந்திரங்களும் இயந்திர சாதனங்களும் | 300,000 | - | 300,000 | 251,998 | 48,002 |
| 2003 | வாகனங்கள் | 600,000 | - | 600,000 | 530,897 | 69,103 |
| 2102 | தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் | 600,000 | - | 600,000 | 150,243 | 449,757 |
| 2401 | பதவியணிப் பயிற்சிகள் | 400,000 | - | 400,000 | 399,642 | 358 |
| | மொத்தம் | 1900,000 | | 1900,000 | 1,332,780 | 567,220 |

## *மீண்டுவரும் செலவினம்:*

| கருத்திட்ட இலக்கம் பெயர்,ஆளுக்குரிய வேதனாதிகள்மற்றும் சகல கருத்திட்டங்களுக்குமான ஏனைய செலவினங்கள் | (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|---|
| | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ஒதுக்கீடு | குறைநிரப்பு ஒதுக்கீடு, மற்றும்குறைநிரப்பு மதிப்பீட்டு. ஒதுக்கீடு | நி.பி.66 மற்றும் நி.பி.69 நியதிகளின் படியான மாற்றம் | மொத்த தேறிய ஒதுக்கீடு | மொத்த செலவினம் | தேறிய விளைவுச் சேமிப்புகள் |
| | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ |
| கருத்திட்ட இலக்கம் 01 மற்றும்பெயர்: பொது நிருவாகமும் தாபன சேவைகளும் ஆளுக்குரிய வேதனாதிகள் | 68,000,000 | - | -3,310,000 | 64,690,000 | 41,858,237 | 22,831,763 |
| ஏனைய செலவுகள் | 15,610,000 | 600,000 | +3,310,000 | 19,520,000 | 16,964,580 | 2,555,420 |
| முழு மொத்தம் | 83,610,000 | 600,000 | - | 84,210,000 | 58,822,817 | 25,387,183 |

# 2018ஆம் ஆண்டுக்கானமீண்டுவரும் செலவின மற்றும் மூலதனச் செலவினப் பொழிப்பு

| விபரம் | 2017 ஆண்டின் உள்ளபடியான செலவினம் ரூ | 2018 ஆண்டின்மொத்த தேறிய ஒதுக்கீடு ரூ | 2018 ஆண்டின் உள்ளபடியான செலவினம் ரூ | தேறிய விளைவுச் சேமிப்புகள் ரூ |
|---|---|---|---|---|
| மீண்டுவரும் | 60,474,522 | 84,210,000 | 58,822,817 | 25,387,183 |
| மூலதன | 1,206,280 | 1,900,000 | 1,332,780 | 567,220 |
| மொத்தம் | 61,680,802 | 86,110,000 | 60,155,597 | 25,954,403 |

**2017ஆம் ஆண்டின்அரசாங்க ஊழியர்களின் முற்பணம் "பீ" கணக்கு - விடய இலக்கம் 018011**

| விபரம் | 2017 ஆண்டின் உள்ளபடியான செலவினம் ரூ | 2018ஆண்டின் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ | 2018ஆண்டின்திருத்திய மதிப்பீடு ரூ | 2018 ஆண்டின் உள்ளபடியான செலவினம் ரூ | எல்லை தாண்டிய மீதி ரூ |
|---|---|---|---|---|---|
| ஆரம்ப மீதி | 4,732,776.50 | - | - | 4,762,856 | - |
| வருடத்தின் மொத்தப் பற்று | 2,221,549.50 | 3,000,000 | - | 2,994,864 | - |
| வருடத்தின் மொத்த வரவு | 2,191,470 | 1,300,000 | - | 2,587,966 | - |
| பற்று மீதியின் உச்ச எல்லை | 4,762,856 | 7,500,000 | - | 5,169,754 | - |